**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 7 /2020**

2025–ஆம் ஆண்டு ஜுன் மாதம் 11–ம் நாள் புதன்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாக்ஷிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா.சந்திரமோகன்.,பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 11.06.2025 | தகப்பனார்/கணவர் பெயர்: | வீராசாமி |
| பெயர்: | அய்யாறு (PW1- Cross ) | தாலுக்கா: | சீர்காழி |
| கிராமம்: | திருமங்கலம் | சமயம்: | |
| தொழில்: | | வயது : | 90 /2025 |

**<u>1–ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை : 11.06.2025</u>**

1. போடப்பட்டிருக்கும் வழக்கு சொத்து யாருக்கு சொந்தமானது என்றால் எனக்கு சொந்தமானது.அந்த சொத்து திருப்பன்கூர் சிவலோக நாதசுவாமி கோவிலுக்கு சொந்தமானது நான் வழக்கு போட்டிருக்கும் பிரதிவாதிகள் நான்கு பேருமே எனது அண்ணன் மகன்கள் ஆவார். இந்த வழக்கு சொத்து சுமார் 60 வருட காலமாக என்னுடைய அனுபவத்தில் இருந்து வருகிறது. மேற்கண்டவாறு நான் சாகுபடி செய்து வருவதற்கு ஆதரவாக இந்த வழக்கில் ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் ரசீது தாக்கல் செய்துள்ளேன் மேற்படி ரசீதில் வழக்கு சொத்தின் சர்வே எண் எதுவும் இல்லை என்றால் எண் போடப்பட்டுள்ளது எனக்கும் எனது அண்ணனுக்கும் ஒப்பந்தம் ஏற்பட்டது பொய் என்றால் அது சரியல்ல அதே போல இந்த வழக்கின் பிரதிவாதிகளின் இடையே ஒப்பந்தம் ஏற்பட்டது பொய் என்றால் அதுவும் சரியல்ல.

2. வழக்குரையில் 1–வது ஐட்டம் சொத்தை பொறுத்து கோவிலார் மயிலாடுதுறை வருவாய் நீதிமன்றத்தில் வழக்கு எண் 442/2015 பிரதிவாதிகள் மீது வழக்கு தொடர்ந்து அவர்களை குத்தகை நிலத்திலிருந்து வெளியேற்றி உத்தரவிட்டுள்ளனர் என்று சொன்னால் சரியல்ல. 1–வது ஐட்டம் சொத்து 1–ம்

பிரதிவாதியால் கோயிலுக்கு ரூ.41,441 /- செலுத்தப்பட்டு அது முதல் அவரது வசத்தில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. தாவா 1-வது ஐட்டம் சொத்து என்னிடம் இருக்கிறது பொய் என்று சொன்னாலும், 1-ம் பிரதிவாதியின் வசத்தில் உள்ளது என்று சொன்னாலும் சரியல்ல.

3. மூன்றாம் பிரதிவாதி ராமகிருஷ்ணன் 1-ம் பிரதிவாதி மகாராஜன் மேல் வழக்கு தொடர்ந்து அந்த வழக்கு அசல் வழக்கு எண் 171/ 2019 அதில் தாவா வழக்கு சொத்தின் ஒண்ணாவது ஐட்டம் சொத்தில் ஒரு பகுதியை எனது வசத்தில் உள்ளது என்று சொல்லி உள்ளார் என்றால் சரி அல்ல. எனக்கும் பிரதிவாதிகளுக்கும் இடையே ஒப்பந்தம் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல அதில் கையொப்பம் என்னால் போர்ஜரியாக போடப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. தாவா வழக்கு சொத்தின் 1-வது ஐட்டம் சொத்து எனது வசத்தில் இல்லை என்பதால் தாவா படி எனக்கு தீர்ப்பாக தேவையில்லை என்று சொன்னால் சரியல்ல .

<u>**மறு விசாரணை இல்லை.**</u>